**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 931/2023 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | கண்ணன் |
| Father Name | : | சுந்தரம் |
| Village | : | சென்னாக்கல்மேடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 52 |

Accused absent. Crpc 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னாக்கல்மேட்டில் குடியிருந்து வருகிறேன். சம்பவ தேதி தற்போது ஞாபகம் இல்லை. அ.சா.1 யின் வீட்டிற்கு எதிர் வீட்டில் நான் குடியிருக்கிறேன். சம்பவத்தின் போது எனது வீட்டிற்கு முன்பாக அ.சா.1 க்கும் அவரது கணவர் குணசேகரன் என்பவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று சரியாக கேட்கவில்லை. அப்போது இருவரும் சண்டை போட்டுக்கொண்டார்கள். நானும் எனது மனைவியும் அவர்களை சண்டையில் இருந்து விலக்கிவிட்டேன். பின்னிட்டு அ.சா.1 அவரது கணவர் மீது புகார் கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரியும் அ.சா.1 யும் சண்டைபோடும் போது விலக்காட்டிவிட்டதாக கூறும் சம்பவமானது காலை 10.00 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். காலை 10.00 மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்றவன் இரவு 8.00 மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். மாலை 5.00 மணிக்கு என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரில் எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 யும் அவரது பெற்றோர்களும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் எனக்கு நண்பர்கள் ஆவார்கள். எதிரி குணசேகரன் எனக்கு அறிமுகம் கிடையாது என்றால் சரிதான். குணசேகரனுக்கும் அ.சா.1 க்கும் இடையே விவாகரத்து

வழக்கு, ஜீவனாம்ச வழக்கு நடைபெற்ற விபரம் தெரியுமா என்றால் அ.சா.1 சொல்லித்தெரியும். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை சாட்சியம் அளிக்க அ.சா.1 தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.26 19:07:09 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 931/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | இளங்கோ |
| Husband Name | : | அண்ணாதுரை |
| Village | : | சென்னாக்கல்மேடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 23 |

Accused absent. Crpc 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னாக்கல்மேட்டில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். தேதி தற்போது ஞாபகம் இல்லை. எனக்கு எனது அக்கா இந்துமதி போன் செய்து அவரது கணவருக்கும் எனது அக்காவுக்கும் சண்டை வந்ததாகவும், அவரை அடித்ததாகவும் கூறினார். நான் வந்து என்ன என்று விசாரித்தேன். அதற்கு எனது அக்கா அவரது குழந்தையை அடிக்க சென்றதாகவும், அதற்காக எனது மாமா எனது அக்காவை அடித்ததாகவும் கூறினார். நான் எனது மாமாவை எதற்காக அடிக்கிறீங்க எதா இருந்தாலும் வாயால் சொல்லவேண்டியதுதான என்று கேட்டேன். அதற்கு எனது மாமா அப்படித்தான் செய்வேன் என்று கூறினார். பின்னர் எனது அக்காவிற்கு கையில் வலி ஏற்பட்டதால் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு பரணி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது சகோதரி என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.26 19:07:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்